**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 14/2020**
**நாள் 18/12/2024 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878 ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஆனந்த பாபு | த/பெயர் – செங்கன் |
| வயது – 39 | தொழில் – |
| விலாசம் – சின்ன நத்தம் கிராமம், மங்காவரம் அஞ்சல், கும்மிடிப்பூண்டி | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் அதை நான் பெற்றுக்கொண்டேன். மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். 01.09.2016 எங்கள் பூர்வீக சொத்தை பொருட்டு ஜெயராமன் கல்லூரிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வாதியும் நாங்களும் சேர்ந்து ராஜா என்பவருக்கு பூர்வீக சொத்தை கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் மேற்படி கிரைய பத்திரம், மேற்படி கிரைய பத்திரத்தின் சான்று நகல் **வா.த.சா ஆ 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தானது கிரையத்திற்கு முன்பு வரை எங்களுடைய அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி கிரையத்திற்கு பிறகு வாதிக்கு அவருடைய பங்கு தொகை கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு பதிலாக அவருக்கு 6 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. மேற்படி 6 செண்ட் நிலத்தின் சர்வே எண் தெரியாது. மேற்படி 6 செண்ட் நிலம் எங்களுக்கு சேரவேண்டிய பாகம் ஆனால் அது வெறு ஒருவரின் பெயரில் பட்டா இருந்தது. நான் கூறுவது தவறு என்றும் அதுபோல் நிலம் எதுவும் வாதியின் பங்கிற்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி அவருடைய பங்கை எங்களிடம் கேட்டதற்கு நாங்கள் ஆட்கள் வைத்து அவரை அடித்தோம் என்றால் சரியல்ல. பாலப்பரெட்டிக்கு சொந்தமான நிலங்கள் எலாவூர், சென்னாவரம் ஆகிய கிராமங்களில் இருந்தது. வாதி எங்கள் மீது ஆரம்பாக்கம் காவல்நிலையத்தில் 04.11.2019 ல் புகார் கொடுத்தார். வாதி எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவுடன் அவரை நாங்கள் ஆட்கள் வைத்து அடித்தோம் என்றும் அதனால் தான் வாதி 04.11.2019 ல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. வாதி தனிநபர் என்பதால் அவருடைய பங்கு தொகையையும் பாக நிலத்தையும் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பி.த.சா ஆ 2 ஆவணத்தை பொருட்டு வா.த.சா ஆ 11 கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதில் இருந்து மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு சேரவேண்டிய பாக நிலத்தை மற்றும் பங்கு தொகையை

அபகறிக்க வேண்டும் என்ற என்னெத்தில் பொய்யான ஆவணங்கள் தயார் செய்து இந்த வழக்கில் எதிர்கச்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**